# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 – 4354302*

## சபை

**முன்னுரை :**

அநேக மேய்ப்பர்களும், போதகர்களும்கூட கிறிஸ்துவின் சரீரமாகிய சர்வலோக சபையும் ஸ்தலசபையும் ஒன்று என்று கூறுவதுண்டு. ஸ்தல சபைகளின் முக்கியத்துவத்தை வேதம் முழுமையாக அங்கீகரித்தபொழுதிலும், ஸ்தல சபைகளுக்கும், கிறிஸ்துவின் சரீரமாகிய சர்வலோக கபைக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் அறிந்திருக்கவேண்டும். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது ஒரு இரகசியம். இந்த இரகசியம் முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை (எபேசியர் 3:6). ஸ்தலசபைகளில் அநேக பெயர் கிறிஸ்தவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆனால், கிறிஸ்துவின் சரீரமாகிய சர்வலோக சபையில் இரட்சிக்கப்பட்டவர்கள் மாத்திரமே அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் (அப்போஸ்தலர் 2:47). ஸ்தல சபைக்கும் சர்வலோக சபை அல்லது கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கும் உள்ள வேற்றுமையை சுட்டிக் காட்டுவதே இப்பாடத்தின் முக்கிய நோக்கமாயிராமல் கிறிஸ்து தம்முடைய சுயரத்தத் தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையின் தோற்றத்தையும், மதிப்பையும், நோக்கத்தையும், எதிர்கால மகிமையையும் குறித்துப் போதிப்பதே இப்பாடத்தின் முக்கிய நோக்கமாகும்.

## இப்பாடத்தின் முக்கியத்துவம் :

சபையின் மூலமாக உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே அவருடைய அநந்த ஞானத்தை தெரியப்படுத்தச் சித்தம் கொண்டார் என்பதை அறிந்துகொள்ள வேண்டியது அவசியம் (எபேசியர் 3:10). நீங்கள் மறுபடியும் பிறந்திருப்பீர்கள் என்றால், மணவாளனாகிய கிறிஸ்துவின் திருமணத்திற்கு ஆயத்தமாகி கொண்டிருக்கிற மணவாட்டியாகிய சபையில் நீங்கள் அங்கத்தினர்களாக இருக்கிறீர்கள் என்பதை உணரவேண்டியது அவசியம் (2 கொரிந்தியர் 11:2; எபேசியர் 5:27). கெட்டுப்போகிற அல்லது அழிந்துபோகிற ஒரு மதத்தையே இவ்வுலகம் பார்க்கிறது. ஆனால் பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்ளாத கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை பார்க்கத் தவறி விடுகிறது (மத்தேயு 16:18). ஸ்தல சபையிலே அங்கத்தினராக இருப்பது அவசியம். ஆனால், அதற்கும் மேலாக கிறிஸ்து தம்முடைய ஜீவனைக் கொடுத்து மீட்டெடுத்த பரிசுத்தவான்களின் கூட்டமாகிய திருச்சபையிலே அதாவது சர்வலோக சபையில் அங்கத்தினராக இருப்பது அவசியம். ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தாரும் இன்னும் வேறு சில கிறிஸ்தவ சபையாரும் தாங்களே இவ்வுலகில் தேவனுடைய உன்மையான ஒரு சபை என்று உரிமை கொண்டாடுகிறார்கள். 'சபை' என்றால் என்ன? அதைக்குறித்து வேதம் என்ன போதிக்கிறது என்பதை சரியாக அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

**பாடம்**

## I. அடிப்படை பொருள் : (கருத்து)

அ. புதிய ஏற்பாட்டில் 'சபை' என்ற வார்த்தையின் அடிப்படைப் பொருள் இரண்டு கிரேக்க வார்த்தைகளில் காணப்படுகிறது.

1. KURIAKON 'குரியாகோன்' கர்த்தருக்குச் சொந்தமானது என்பதே இந்த கிரேக்கு வார்த்தையின் பொருள் அல்லது அர்த்தம். **உதாரணம் :** 1 கொரிந்தியர் 11:20,21 (கர்த்தருடைய இராப்போஜனம்); ரோமர் 14:8 – கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்.
2. EKKLESIA 'எக்லீசியா' 3 முறை புதிய ஏற்பாட்டில் இந்த கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. 'EK' என்பதற்கு 'வெளியே' 'KALEO' என்பதற்கு 'அழை' என்று பொருள். எனவே இந்த கிரேக்கு வார்த்தை உண்மையில் ''பிரித்தெடுக்கப்பட்ட மக்களின் கூட்டம்'' அல்லது ''அழைக்கப்பட்ட மக்களின் கூட்டம்'' என்று பொருள்படும்.
   a. மறுபடியும் பிறந்தவர்கள் அனைவரும் பிரித்தெடுக்கப்பட்ட அல்லது அழைக்கப்பட்ட மக்களின் கூட்டமாக இருக்கிறார்கள் (ரோமர் 8:30; 2 கொரிந்தியர் 6:17).
   b. சபையானது இவ்வுலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட விசுவாசிகளைக் கொண்டதாயிருக்கிறது (அப்போஸ்தலர் 2:47; யோவான் 15:19).

ஆ. EKKLESIA – 'எக்லீசியா' என்ற கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டு காலத்திற்கு முன்பதாகவே கிரேக்கர்களாலும், யூதர்களாலும் பயன்படுத்தப்பட்டது. பொது மக்களின் நலன் கருதி தீர்மானம் எடுக்கவும், ஆலோசனை செய்யவும் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்ட ஒரு சட்டசபை என்ற கருத்தின் அடிப்படையில் கிரேக்கர்கள் 'எக்லீசியா' என்ற கிரேக்கு வார்த்தையைப் பயன்படுத்தி வந்தார்கள் (அப்போஸ்தலர் 19:38,39). யூதர்கள் 'எக்லீசியா' என்ற கிரேக்கு வார்த்தையை இஸ்ரவேல் ஜனங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட, பிரித்தெடுக்கப்பட்ட ஜனக்கூட்டம் என்ற கருத்தின் அடிப்படையில் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

இ. கிரேக்கர்களுக்கு 'எக்லீசியா' என்ற கிரேக்கு வார்த்தையாயனது தன்னிச்சையாகச் செயல்படுகிற ஜனநாயக சமுதாயத்தைக் குறிக்கக்கூடியதாக இருக்கிறது. யூதர்களுக்கு 'எக்லீசியா' என்ற கிரேக்கு வார்த்தையானது "பரலோக ராஜாவுக்கு கீழ்ப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய பிள்ளைகளின் கூட்டம் அல்லது சமுதாயம்" என்று பொருள்படக்கூடியதாக இருக்கிறது. மீட்கப்பட்ட அல்லது விடுதலையாக்கப்பட்ட கர்த்தருக்குக் கீழ்ப்படிகின்ற விசுவாசிகளின் கூட்டம் என்பதை விளக்கும் வகையில் புதிய ஏற்பாட்டில் சபைக்கு 'எக்லீசியா' என்ற கிரேக்கு வார்த்தை பயன்யபடுத்தப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்டுள்ள இரண்டு கருத்துக்களும் நிச்சயமாக இக்கருத்தோடு சம்பந்தமுடையதாயிருக்கிறது.

## II. பழைய ஏற்பாட்டில் 'எக்லீசியா' என்ற கிரேக்கு வார்த்தை எப்படி பயன்படுத்தப்பட்டுள்ளது?

அ. ஆதியிலே 'எக்லீசியா' என்ற கிரேக்கு வார்த்தையின் பொருள் 'பிரித்தெடுக்கப்பட்ட ஒரு சங்கத்தின் கூட்டம்' என்பதாகும் (அப்போஸ்தலர் 19:41). இதற்கு ஒத்த நிலையில் பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு அல்லது அழைக்கப்பட்டு வனாந்தரத்தில் ஒன்று சேர்க்கப்பட்டார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனால் பிரித்தெடுக்கப்பட்ட ஒரு ஜனக்கூட்டம் என்பதை குறிக்கும் வகையில் 'எக்லீசியா' என்ற கிரேக்கு வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆ. பரிசுத்த ஜனமாய் இருக்கும்படி தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனமே இஸ்ரவேல் ஜனங்கள். அவர்கள் பிரித்தெடுக்கப்பட்ட சபை அல்லது கூட்டம் என்று கருதப்பட்டபொழுதிலும் புதிய ஏற்பாட்டில் உள்ள சபைக்கு ஈடாக மாட்டார்கள்.

இ. கட்டிடம், ஆலயம், கிறிஸ்துவின் சரீரம், கிறிஸ்துவின் மணவாட்டி என்று அழைக்கப்படுகிற சபையானது பழைய ஏற்பாட்டில் புதைந்து அல்லது மறைந்து கிடந்த இரகசியம் என்பதை மனதில்கொள்வது நல்லது. அப்போஸ்தலனாகிய பவுலின் மூலமாக மறைந்துகிடந்த இந்த இரகசியத்தை வெளிப்படுத்த தேவன் சித்தம் கொண்டார் (எபேசியர் 3:3–10). "இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார்" என பவுல் கூறுகிறார் (ரோமர் 16:25,26).

## III. புதிய ஏற்பாட்டு சபையின் அஸ்திபாரம் :

அ. முதன்முதலாக நாம் சபையைக் குறித்து மத்தேயு எழுதின சுவிசேஷம் 16–ஆம் அதிகாரம் 18–ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை." இங்கே கர்த்தராகிய கிறிஸ்து சபையைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்துள்ளார்.

ஆ. எருசலேம் நகரில் சபையின் அற்புதமான ஆரம்பத்தையும், அதைக் குறித்ததான தீர்க்கதரிசனமும், வாக்குத்தத்தமும் எவ்வாறு நிறைவேற ஆரம்பித்தது என்பதையும் அப்போஸ்தலர் நடபடிகள் 1,2 அதிகாரங்கள் மூலமாக தெளிவாக அறிந்துகொள்கிறோம்.

இ. மத்தேயு 16–ஆம் அதிகாரம் 18–ஆம் வசனம் பல்வேறு முரண்பட்ட மொழிபெயர்ப்புகள் எழும்புவதற்கு இடம் கொடுத்திருக்கிறது.

1. கர்த்தராகிய கிறிஸ்து மற்ற எல்லா அப்போஸ்தலர்களைக் காட்டிலும் பேதுருவுக்கு மேலான அதிகாரத்தைக் கொடுத்து, பூரணமான, பிழையற்ற பேதுருவாகிய அந்தக் கல்லின்மேல் சபையைக் கட்டியிருக்கிறார் என்ற நம்பிக்கையை ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தார் கொண்டிருக்கிறார்கள். ஆயினும், பேதுரு அந்தியோகியாவுக்கு வந்தபோது அவர்மேல் குற்றஞ் சுமந்ததினால் பவுல் முகமுகமாய் அவரை எதிர்த்தார் (கலாத்தியர் 2:11). எருசலேம் சபையில் யாக்கோபுக்கே மேலான அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. பேதுருவுக்கு அல்ல (அப்போஸ்தலர் 15:13–27). கர்த்தராகிய கிறிஸ்துவுக்குப்பின் அவருடைய ஸ்தானத்திற்கு பேதுரு வந்தார் என்பதற்கும், பேதுருவுக்குப் பின் போப்பிற்கு (POPE) அந்த ஸ்தானம் கொடுக்கப்பட்டது என்பதற்கும் வேதத்தில் ஒரு சிறுதுளி அளவுகூட இடம் கிடையாது.

2. பேதுருவாகிய கல்லின்மேல் சபையானது கட்டப்பட்டிருக்கிறது என்று ஒரு சில வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். ஆனால் வேதம் அப்படி போதிக்கிறது இல்லை. சபையானது கர்த்தராகிய கிறிஸ்துவின்மேல் கட்டப்பட்டிருக்கிறது என்றே வேதம் தெளிவாகப் போதிக்கிறது.

a. போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தை போட ஒருவனாலும் கூடாது (1 கொரிந்தியர் 3:11).

b. ஜீவனுள்ள கல், விலையேறப்பெற்ற மூலைக்கல் என்று கிறிஸ்துவை பேதுரு குறிப்பிடுகிறார். அந்தக்கல் இடறுதற்கேதுவான கன்மலையுமாயிருக்கிறது என்று தம்முடைய முதலாம் நிருபம் 2–ம் அதிகாரத்தில் கிறிஸ்துவைக் குறித்துச் சொல்லுகிறார் (1 பேதுரு 2:4–8).

c. கிறிஸ்து 'கல்' என்று அழைக்கப்பட்டார் (ஏசாயா 28:16).

d. 1 கொரிந்தியர் 10:4–ம் வசனத்தில் அந்தக் கன்மலை கிறிஸ்துவே என்று வாசிக்கிறோம்.

3. கர்த்தராகிய 'கிறிஸ்து இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்' என்று 'அராமெய்க்' மொழியில் பேசினார். எனவே 'கன்மலை' என்பதற்கும் 'கல்' என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது என்று ஏ.டி. ராபர்ட்சன் என்ற புதிய ஏற்பாட்டு விளக்க உரையாளர் தன்னுடைய புஸ்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும் பேதுருவாகிய கல்லின்மேல் சபையானது கட்டப்படுவதில்லை என்பதே இவர் கருத்து. இயேசுவே கிறிஸ்து அல்லது மேசியா, ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று பேதுரு தைரியமாகவும், சந்தோஷமாகவும் அறிக்கை செய்யும் வகையில் அவருக்கு தேவனிடத்திலிருந்து வெளிப்பாடு கொடுக்கப்பட்டது. பேதுரு விசுவாசத்தினாலே அறிக்கையிட்ட ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவின்மேல் சபையானது கட்டப்பட்டதாயிருக்கிறது. பேதுருவைப்போல கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை வைத்து அவரை அறிக்கை பண்ணுகிறவர்கள் யாவரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உறுப்பினர்களாக ஆக்கப்பட்டு என்றென்றும் காக்கப்படுகிறார்கள் (யோவான் 20:31; அப்போஸ்தலர் 16:31; யோவான் 8:24).

4. ஆல்பர்ட் பர்னேஸ் என்ற வேதவிளக்க உரையாளர் 'இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்' என்ற வேதபகுதியை விளக்கும்பொழுது அவர் இப்படிச் சொல்லுகிறார் : அதாவது 'இந்தக்கல்' என்பது பேதுருவைத் தான் குறிக்கிறது. ஆனால், ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தார் நினைப்பதுபோல பேதுரு மற்ற அப்போஸ்தலர்களைக் காட்டிலும் மேலானவர் என்று கிறிஸ்து கருதவில்லை. புறஜாதிகள் மத்தியிலும், யூதர்கள் மத்தியிலும், சபைக்கு அஸ்திபாரம் போடும் கனத்தைக் கொடுப்பேன் என்ற அர்த்தத்தில் கிறிஸ்து கூறினார். மத்தேயு 16–ஆம் அதிகாரம் 18–ஆம் வசனத்தில் கூறப்பட்ட வாக்குத்தத்தம் ஒருவிதத்தில் அப்போஸ்தவர் நடபடிகள் 2–ஆம், 10–ஆம் அதிகாரங்களில் நிறைவேறிற்று என்பது இவருடைய கருத்து.

5. மேலே கூறப்பட்ட கருத்துக்களில் கடைசி மூன்றும் ஒருவிதத்தில் சரியானது. சபையில் உறுப்பினர்களாய் இருப்பவர்களின் நம்பிக்கை கன்மலையாகிய கிறிஸ்துவின்மேல் இருக்கவேண்டியது அவசியம். இயேசுவே கிறிஸ்து அல்லது மேசியா, ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்யாத எவரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கத்தினர்கள் ஆகமுடியாது. புறஜாதிகள் மத்தியிலும், யூதர்கள் மத்தியிலும் சபை ஸ்தாபிப்பதற்கு அப்போஸ்தலனாகிய பேதுரு அஸ்திபாரம் போட்டடியினாலே அவருக்கு கனம் கொடுக்கப்பட்டது. மனிதர்களின் கொள்கைக் கருத்துக்களைக் குறித்து வாக்குவாதம் பண்ணுகிறவர்களாயிராமல் மகிமையான இந்த சத்தியத்தில் சந்தோஷமுடையவர் களாயிருப்போம்.

ஈ. இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. இரண்டு கருத்துக்கள் :

1. இங்கே சபையானது கட்டிடத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது (எபேசியர் 2:10–22; 1 பேதுரு 2:4–8 வாசியுங்கள்).

2. 'பாதாளத்தின் வாசல்' அநேக வேத ஆசிரியர்கள் இக்கூற்றை இவ்விதமாக வழங்குகிறார்கள் : அதாவது பொல்லாத ஆவிகளின் சேனைகள் சபைக்கு விரோதமாக எழும்பி வருகிறது. ஆனால் சபையானது சாத்தானின் தாக்குதலை முறியடித்து வெற்றி சிறக்கிறது. 'பாதாளம்' என்பது கிரேக்கு மொழியில் 'ஹேடிஸ்' (HADES) என்றும் எபிரெய மொழியில் 'சீயோல்' (SHEOL) என்றும் அழைக்கப்படுகிறது. மரணமடைந்த வர்களின் இடம் என்பது இவ்வார்த்தையின் பொருள். மரணம் கிறிஸ்துவின்மேல் வெற்றி கொள்வதில்லை என்பதே மிகப் பிரதான காரியமாகும். கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைத்தவர்கள் மரணத்தைக் குறித்து பயப்பட வேண்டிய அவசியமில்லை. மரணத்தின் வல்லமை நொறுக்கப்பட்டுவிட்டது. கிறிஸ்து நமக்காக மரணத்தை ஜெயித்திருக்கிறார் (எபிரெயர் 2:14; 1 கொரிந்தியர் 15:54–57).

3. கர்த்தராகிய கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்து தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்து தம்முடைய சுயரத்தத்தினாலே அதை சம்பாதித்துக் கொண்டார் என்பதை எப்பொழுதும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும் (எபேசியர் 5:27; அப்போஸ்தலர் 20:28).

## IV. சபையின் ஆரம்பம், அமைப்பு :

1. மத்தேயு 16–ஆம் அதிகாரம் 18–ஆம் வசனத்தில் பாதாளத்தின் வாசல்கள் அதை (சபையை) மேற் கொள்வதில்லை என்ற தீர்க்கதரிசனத்தைப் பார்க்கிறோம்.
2. சபையானது இயங்கக்கூடியதாகவும், உறுப்பினர்களுக்கிடையே ஏற்படக்கூடிய பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் பொறுப்புள்ள, ஒழுக்கமுள்ள ஒரு அமைப்பு என்பதையும் கிறிஸ்து அறிந்திருக்கிறார் (மத்தேயு 18:15–18).
3. அவருடைய நாமத்தினாலே எங்கே இரண்டு மூன்று பேர்கள் கூடியிருக்கிறார்களோ அதுவே 'சபை' என்று கர்த்தர் குறிப்பிடுகிறார் (மத்தேயு 18:20).
4. சபையின் தொடக்கத்திலே 120 பேர்கள் மாத்திரம் மேல்அறையிலே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவருடைய வல்லமைக்காக காத்து கொண்டிருந்தார்கள் (லூக்கா 24:49; அப்போஸ்தலர் 1:8). பரிசுத்த ஆவியானவரின் வல்லமை பெற்றவுடனே பல மொழிகளில் பிரசங்கம் செய்தார்கள். இரட்சிக்கப்பட்டவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள். இறுதியாக, அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள் (அப்போஸ்தலர் 1:15–2:46).
5. ஆதித்திருச்சபை வேகமான பெரிய வளர்ச்சியைக் கண்டு இருக்கிறது. அப்போஸ்தலர் 1:15–ஆம் வசனத்தில் 120 பேர்கள் என்றும், அப்போஸ்தலர் 2:41–ஆம் வசனத்தில் 3000 பேர்கள் என்றும், அப்போஸ்தலர் 4:4–ஆம் வசனத்தில் 5000 பேர்கள் என்றும், அப்போஸ்தலர் 4:32–ஆம் வசனத்திலும், 5:14–ஆம் வசனத்திலும் திரளான கூட்டத்தார் என்றும் வாசிக்கிறோம். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் என்று அப்போஸ்தலர் 2:47–ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். "கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்" என்ற வார்த்தையைக் கவனிக்க வேண்டும். ஒருவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு உண்மையான விசுவாசியானவுடனே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கத்தினராக கருதப்படுகிறார். அவர் இச்சபையில் சேருவதா, வேண்டாமா என்ற கேள்விக்கு இடமேயில்லை.
6. சபையின் அமைப்பு கிரமமாக வளர்ந்து வரவேண்டியது அவசியமாய் இருந்தது. அப்போஸ்தலர் 6–ஆம் அதிகாரம் 1 முதல் 4 வசனங்களில் நாம் பார்ப்பது என்னவென்றால், பந்திவிசாரணை செய்வதற்கு உதவிக்காரர்களை நியமித்தார்கள். ஆனால் அப்போஸ்தலர்கள் ஜெபம்பண்ணுவதிலும், வேதவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருந்தார்கள். ஒவ்வொரு சபைக்கும் மூப்பர்களை பின்பு ஏற்படுத்தினார்கள் (அப்போஸ்தலர் 11:30; 14:23).
7. ஆதித்திருச்சபை ஒரே சபையாகக் கருதப்பட்டது. அத்திருச்சபையின் மக்கள் பல்வேறு இடங்களில் கூடிவந்தார்கள். முதலாவது வீடுகளில் கூடிவந்தார்கள். அதை நாம் அப்போஸ்தலர் 2:46–லும், 12:12–லும் வாசிக்கிறோம். மேலறையில் கூடிவந்தார்கள் என்று அப்போஸ்தலர் 1:13–ல் வாசிக்கிறோம். சாலமோனுடைய மண்டபத்தில் கூடிவந்தார்கள் என்று அப்போஸ்தலர் 5:12–ல் வாசிக்கிறோம். ஜெபஆலயத்தின் கூடிவந்தார்கள் என்று அப்போஸ்தலர் 13:5–ல் வாசிக்கிறோம்.
8. ஆதித்திருச்சபை மக்கள் தவறாமல் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கூடிவந்தார்கள். ஒவ்வொருநாளும் கூடிவந்தார்கள் என்று அப்போஸ்தலர் 2–ஆம் அதிகாரம் 46–ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். ஒவ்வொரு கர்த்தருடையநாளிலும் கூடிவந் தார்கள். அதை நாம் அப்போஸ்தலர் 20:7–ல் வாசிக்கிறோம். ஜெபிப்பதற்குக் கூடிவந்தார்கள் என்று அப்போஸ்தலர் 3:1–லும், 10:9–லும் வாசிக்கிறோம்.
9. அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர் தவிர, மற்ற யாவரும் யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறப்பட்டு போனார்கள் (அப்போஸ்தலர் 1:8; 8:4). அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையானது புறஜாதிகளின் சபைக்கு தலைமை சபையாக மாறினது. ஆனால் எருசலேமில் உள்ள சபையானது யூதர்களின் தலைமை சபையாக விளங்கினது (அப்போஸ்தலர் 13:1; 15:2–21).

## V. சபையின் அடிப்படைக்கொள்கை :

1. ஸ்தல சபைகள் எல்லாம் விசுவாசிகளை அங்கங்களாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது என்பது மிகவும் தெளிவாக இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் எங்கெல்லாம் சென்றாரோ அங்கே ஸ்தல சபைகளை ஸ்தாபித்தார். எனவே அவருடைய நிருபங்களில் கொரிந்து சபை, கலாத்திய சபை, தெசலோனிக்கேய சபை என்று குறிப்பிடுவதை நாம் பார்க்கிறோம்.
2. சபைகள் ஒரு சில குறிப்பிட்ட நடைமுறைகளை கடைபிடித்து வந்தன என்பதை 1 கொரிந்தியர் 12,13,14–ம் அதிகாரங்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. விசுவாசிகளைக் கொண்ட ஸ்தல சபைகள் இருந்தன என்பதற்கு அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபங்களும், தீத்துவுக்கு எழுதின நிருபமும் ஆதாரமாய் அமைகிறது.

3. மிகவும் எளிமையான முறையில் ஸ்தல சபை அமைப்பின் வடிவம் வைக்கப்பட்டிருந்தது. அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பு சபையாருக்கு எழுதும்போது இந்தவிதமாக எழுதுகிறார். பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக் குள்ளான பரிசுத்த வான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் (பிலிப்பியர் 1:1) என்று குறிப்பிடுகிறார். அநேக இடங்களில் பரிசுத்தவான்களே, உண்மையுள்ள சகோதரரே என்று சாதாரணமாகக் குறிப்பிடுவது வழக்கம். கண்காணி, மூப்பர், மேய்ப்பர் இம்மூன்று வார்த்தைகளும் ஒரே பணியைச் செய்யக் கூடியவர்களைக் குறிக்கிறது (தீத்து 1:5,7). கண்காணி என்பது அவர் செய்யக்கூடிய பணியையும், மூப்பர் என்பது அம்மனிதரையே குறிக்கக்கூடியதாகவும் இருக்கிறது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் சபையில் ஒன்றுக்கும் மேற்பட்ட மூப்பர்களும், மேய்ப்பர்களும் இருந்தார்கள். மூப்பர்களின் தகுதிகளைக் குறித்தும், அவர்களை நியமிப்பதைக் குறித்தும் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டது (அப்போஸ்தலர் 14:23; தீத்து 1:5–9; 1 தீமோத்தேயு 3:1–7.
4. பந்திவிசாரணை செய்வதற்காக உதவிக்காரர்களை நியமித்தார்கள் என்று அப்போஸ்தலர் 6–ஆம் அதிகாரம் 1 முதல் 6 வசனங்களில் பார்க்கிறோம்.

## VI. சபையின் ஐக்கியம் :

அ. சபையிலே ஐக்கியமாயிருப்பதற்கு கீழ்க்கண்ட காரியங்கள் சந்திக்கப்பட வேண்டியது அவசியம் :

1. அனைவரும் மனந்திரும்ப வேண்டும் (அப்போஸ்தலர் 2:38; 3:20; 11:18; 17:30).
2. இயேசுவே கிறிஸ்து என்றும், ஜீவனுள்ள தேவனுடைய குமாரனென்றும், மீட்பர் என்றும் அறிக்கைப் பண்ணப்படுதல் அவசியம் (அப்போஸ்தலர் 16:31; ரோமர் 10:9; மத்தேயு 16:16–28; 1 யோவான் 4:15).
3. கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைத்ததற்கு அடையாளமாக பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் முழுக்கு ஞானஸ்நானம் எடுத்து விசுவாசத்தை அறிக்கை செய்யவேண்டியது அவசியம் (அப்போஸ்தலர் 2:38–41; மத்தேயு 28:19; அப்போஸ்தலர் 10:47,48; ரோமர் 6:3–5; அப்போஸ்தலர் 8:36,38; 16:33; 18:8).
4. உண்மையாக இரட்சிக்கப்பட்டவர்கள் ஸ்தல சபையிலே அங்கத்தினர்களாக ஆவதற்கு முன்பே, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உறுப்பினர்களாக ஆகிறார்கள் (யோவான் 3:3–8; அப்போஸ்தலர் 2:47; 5:14; 11:24).

மேலே கூறப்பட்ட காரியங்களோடு இன்னும் சில குறிப்பிட்ட காரியங்கள் ஆதித்திருச்சபை மக்களைக் குறித்து விவரிக்கப்பட்டிருக்கிறது.

5. அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப்போஸ்தலர் 2:42).
6. அவர்கள் பரிசுத்தவான்கள் என்றும், பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 5:13; ரோமர் 1:1–7; 16:2; எபேசியர் 2:19; 4:12,13; யூதா 1–3).
7. அவர்கள் 'கிறிஸ்தவர்கள்' என்று அழைக்கப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 11:26).
8. அவர்கள் 'சகோதரர்கள்' என்று அழைக்கப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 12:17; ரோமர் 1:13).
9. அவர்களிடையே பூரணமான சமத்துவம் காணப்பட்டது (மத்தேயு 23:8–12).
10. அவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் (ரோமர் 8:33; 1 பேதுரு 1:2; கொலோசெயர் 3:12).

## VII. சபையின் முக்கியப்பகுதி :

கிறிஸ்து சபைக்கு 7 சட்டங்களைக் கொடுத்துள்ளார் என்பது ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தாரின் போதனை. ஆனால் புதிய ஏற்பாடு நமக்கு 2 சட்டங்களையே வெளிப்படுத்துகிறது. அவைகள் சபை கைக்கொள்ளும்படியாக தேவனால் கொடுக்கப்பட்டதாயிருக்கிறது.

அ. ஞானஸ்நானம் (மத்தேயு 28:19; அப்போஸ்தலர் 8:12; 10:47,48).

ஆ. கர்த்தருடைய பந்தி (மத்தேயு 26:26–28; 1 கொரிந்தியர் 11:23,24; அப்போஸ்தலர் 20:7).

## VIII. சபையின் கருத்தை வெளிப்படுத்த பயன்படுத்தப்பட்டுள்ள பெயர்கள் : (சபைக்குக் கொடுக்கப்பட்ட பெயர்கள் அவற்றின் ஒப்பற்ற தன்மையை வெளிப்படுத்துகிறது)

அ. பல்வேறு வகையான பெயர்கள் சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

1. சபையானது அநேக உறுப்பினர்களைக் கொண்ட ஒரே சரீரமாகக் காணப்படுகிறது (கொலோசெயர் 3:15; எபேசியர் 4:16; 1 கொரிந்தியர் 6:15; 10:17; 12:12–31).

   விசுவாசிகள் ஒரே சரீரத்தின் அவயவங்களாக இருப்பதால் கிறிஸ்துவோடும் உடன் விசுவாசிகளோடும் நெருங்கிய தொடர்புடையவர்களாயிருக்கிறார்கள்.

2. இந்த ஒரே சரீரம் கிறிஸ்துவின் சரீரம் என்று அழைக்கப்படுகிறது (எபேசியர் 1:22,23; கொலோசெயர் 1:24). இச்சரீரத்திற்கு கிறிஸ்துவே தலையாய் இருக்கிறார் (எபேசியர் 1:23; 4:15; 5:23; கொலோசெயர் 1:18). கிறிஸ்து தலையாக இருக்கிறபடியியால் அவரே சபையை போஷிக்கிறவராயிருக்கிறார், சபையை

பாதுகாக்கிறவரும், அதற்குத் தேவையான எல்லாவற்றையும் கொடுப்பவரும், நடத்துகிறவரும் அவரே (எபேசியர் 4:15,16; 5:23,24). சரீரமாகிய சபைக்கு அவரே நிறைவாய் இருக்கிறார் (எபேசியர் 1:23). சபையின் வளர்ச்சிக்கு அவரே காரணமாய் இருக்கிறார் (கொலோசெயர் 2:18).

3. சபையானது ஓர் கட்டிடம் அல்லது மாளிகை என்று சொல்லப்பட்டிருக் கிறது (1 கொரிந்தியர்3:9,16,17; எபேசியர் 2:19–22; 1 பேதுரு 2:4–8). இந்த மாளிகைக்கு கிறிஸ்துவே மூலைக்கல்லாக இருக்கிறார். கிறிஸ்துவே அஸ்திபாரம் (1 கொரிந்தியர் 3:11).

   இந்த அஸ்திபாரம் அப்போஸ்தலர்களாலும், தீர்க்கதரிசிகளாலும் போடப்பட்டது (1 கொரிந்தியர் 3:10; எபேசியர் 2:20). பூமியில் பரிசுத்த ஆவியானவரின் தங்குமிடமாய் இக்கட்டிடமாகிய சபை விளங்குகிறது (எபேசியர் 2:22; 1 கொரிந்தியர் 3:16).

4. விசுவாசிக்கிற யூதர்களாலும், புறஜாதிகளாலும் ஆன ஒரு புதிய சரீரம் என்றும், புதிய மனிதன் என்றும் இச்சபை அழைக்கப்படுகிறது (எபேசியர் 2:15).

5. சபையானது "கிறிஸ்துவின் மணவாட்டியாய் இருக்கிறது" (2 கொரிந்தியர் 11:2; எபேசியர் 5:23–25,32). மணவாளனாக கிறிஸ்து காணப்படுகிறார் (யோவான் 3:29). விசுவாசிகள் கற்புள்ள கன்னிகைகளாக அவருக்கு நியமிக்கப்பட்டிருக் கிறார்கள் (2 கொரிந்தியர் 11:2).

ஆ. சபைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள பெயர்கள் அவற்றின் ஒப்பற்றத் தன்மையைக் காட்டுகிறது.

1. கிறிஸ்துவின் சரீரமாகிய சர்வலோக சபையை ஸ்தல சபையோடு ஒப்பிட்டுக் குழப்பக்கூடாது.

   a. ஸ்தல சபை ஒரு குறிப்பிட்ட இடத்தில் இயங்குகிற ஸ்தாபனமாக இருக்கிறது. சர்வலோக சபையானது ஒரு ஜீவனுள்ள அமைப்பு.

   b. ஸ்தல சபை பார்க்கக்கூடியதாய் இருக்கிறது. கிறிஸ்துவின் சரீரமாகிய சர்வலோக சபை பார்க்க முடியாததாய் இருக்கிறது.

   c. ஸ்தல சபையானது ஓர் வரம்பிற்கு உட்பட்டதாயிருக்கிறது. கிறிஸ்துவின் சரீரமாகிய சர்வலோக சபை சர்வலோகத்தின் சபையாகும். அது வரம்பிற்கு உட்பட்டதாக இல்லை.

   d. யார் விரும்பினாலும் ஒரு ஸ்தல சபையில் அங்கத்தினர்களாக வாய்ப்பிருக்கிறது. ஆனால் இரட்சிக்கப்பட்டவர்கள் மாத்திரமே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கத்தினர்களாக முடியும் (அப்போஸ்தலர் 2:47; 1 கொரிந்தியர் 12:13). அவருக்குரியவர்களை அவர் அறிந்திருக்கிறார் (2 தீமோத்தேயு 2:19). கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் அல்ல, கிறிஸ்துவை உடையவர்களாக இருக்க வேண்டும். ஸ்தல சபையின் அங்கத்தினர் பட்டியலில் இருப்பவர்கள்அல்ல, அடிக்கப்பட்டஆட்டுக்குட்டியானவரின் ஜீவப்புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரமே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கத்தினர்கள் ஆகமுடியும்.

   e. புதிய ஏற்பாட்டில் ஸ்தல சபை என்பதற்கு விசுவாசிகள் எங்கே கூடுகிறார்களோ அந்த இடத்தைக் குறிக்கக்கூடியதாய் இருக்கிறது (1 கொரிந்தியர் 1:2). கிறிஸ்துவின் சரீரமாகிய சர்வலோக சபை அனைத்து விசுவாசிகளையும் குறிக்கக்கூடியதாய் இருக்கிறது (1 கொரிந்தியர் 15:9; கலாத்தியா 1:13).

2. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை பரலோக ராஜ்யத்தோடும், கிறிஸ்தவத் தோடும் ஒப்பிட்டுக் குழப்பக் கூடாது.

   a. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது மதத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட ஒரு அமைப்பு அல்ல. மதத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட அந்த அமைப்புக்காக கிறிஸ்து தமது ஜீவனைக் கொடுக்கவில்லை (எபேசியர் 5:25–27). அப்போஸ்தலனாகிய பவுல் துன்பப்படுத்தியது இச்சபையை அல்ல (1 கொரிந்தியர் 15:9).

   b. மத்தேயு 16–ஆம் அதிகாரம் 18–ஆம் வசனத்தில் கிறிஸ்து ஸ்தாபிக்கப்போகிற புதிய ஸ்தாபனத்திற்கு சபை என்ற புதிய பெயரைப் பயன்படுத்தினார். ஆனால், சபையையும், இராஜ்யத்தையும் தெளிவாக வேறுபடுத்தி யிருக்கிறார்.

   c. 'இராஜ்யம்' என்ற வார்த்தையை அப்போஸ்தலர்கள்அடிக்கடி பயன்படுத்தவில்லை. பெந்தெகோஸ்தே நாளிலிருந்து இரட்சிக்கப்படுகிற வர்களை கர்த்தர் சபையிலே சேர்த்துக் கொண்டு வருகிறார் (அப்போஸ்தலர் 15:14; 2:47).

d. யூதர்கள் வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளிய இராஜ்யமானது கிறிஸ்து மறுபடியும் இப்பூமிக்கு வரும்பொழுது ஸ்தாபிக்கப்படும் (அப். 1:6).

3. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை 'இஸ்ரவேல்' ஜனங்களுடன் ஒப்பிட்டுக் குழப்பக்கூடாது. இஸ்ரவேல் ஜனங்கள் மொத்தமாக யெகோவாவின் உண்மையற்ற மனைவியாயிருக்கிறது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலே இஸ்ரவேல் ஜனங்கள் மனந்திரும்புவதின் மூலமாக மன்னிக்கப்பட்டு மறுபடியும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

   கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமிக்கப்பட்டிருக்கிறது (2 கொரிந்தியர் 11:2). அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி யானவரின் மணவாட்டியாக இருக்கிறது (வெளி. 19:6–8; ஓசியா 2:1–23; ஏசாயா 54:1–10; எபேசியர் 5:25–27).

4. 1 கொரிந்தியர் 10–ஆம் அதிகாரம் 33–ஆம் வசனத்தில் யூதர், கிரேக்கர், சபை என்று மூன்று பிரிவுகளைப் பார்க்கிறோம். எனவே சபையானது இவ்வுலகத்தில் ஒப்பற்றதாய் இருக்கிறது.

## IX. சபையின் பணிகள் : (ஆதித்திருச்சபையின் கடமைகளும், செயல்பாடுகளும்)

அ. **அப்போஸ்தலர்கள் :** இயேசுகிறிஸ்துவால் தெரிந்தெடுக்கப்பட்ட 11 பேர் மாத்திரம் அல்ல, அப்போஸ்தலனாகிய பவுலும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைக் கண்டதற்கு சாட்சியாயிருக்கிறார் (அப்போஸ்தலர் 1:22; 1 கொரிந்தியர் 15:8,9).

1. அப்போஸ்தலர் என்ற நிலையில் அவர் அதிசயங்களையும், அற்புதங்களையும், வல்லமையானவை களையும் செய்தவராக இருந்தார் (2 கொரிந்தியர் 12:12).
2. சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு கிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப்பட்ட மனுஷராக இருந்தார் (1 கொரிந்தியர் 1:17; 9:16; 2 கொரிந்தியர் 4:1–5; கொலோசெயர் 1:23).
3. அவர் பிரசங்கியாகவும், போதகராகவும் காணப்பட்டார் (1 தீமோத்தேயு 2:7; 2 தீமோத்தேயு 1:11).
4. சபைகளில் மூப்பர்களை ஏற்படுத்தினார் (அப்போஸ்தலர் 14:23).
5. சபைகளை உருவாக்கி அதைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அப்போஸ்தலருக்கு இருந்தது. அதை அவர் நிறைவேற்றினார் (2 கொரிந்தியர் 11:28; அப்போஸ்தலர் 16:5; 15:41).
6. அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்படும் பொறுப்பானது அவர்கள் மரித்தவுடன் முடிந்துபோகிறது.

ஆ. **தீர்க்கதரிசி :** (அலுவலக சம்பந்தமான பணியை இது குறிப்பது அல்ல)

1. சிறப்பு வெளிப்பாடு பெற்றவராய் இருக்கவேண்டும் (எபேசியர் 3:6).
2. சபையை ஊக்குவித்து பக்திவிருத்தி அடையச்செய்ய அனுப்பப்பட்டவர் (1 கொரிந்தியர் 14:4,22).
3. சபைக்கு அஸ்திபாரம் போடுவதற்கு உதவியவர் (எபேசியர் 2:20).
4. புதிய ஏற்பாட்டில் உள்ள தீர்க்கதரிசி வரப்போகிற காரியங்களைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்தவரல்ல, ஆனால் வெளிப்படுத்தப்பட்ட காரியங்களைக் கொண்டு சபைகளை உற்சாகப்படுத்தவும், ஆறுதல்படுத்தவும் செய்தார் (1 கொரிந்தியர் 14:5).
5. அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும் அதிகாரம் பெற்றிருந்தார்கள் என்று சபை உணர்ந்திருந்தது.

இ. **சுவிசேஷகர்களும், போதகர்களும் :** (எபேசியர் 4:13)

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை வளர்ப்பதற்கும், பரிசுத்தவான்களை சுவிசேஷப் பணிக்கு ஆயத்தப்படுத்துவதற்கும் ஏற்ற வகையில் இவர்கள் சிறப்புத் தாலந்துகளைப் பெற்றிருந்தார்கள் (எபேசியர் 4:12; எபிரெயர் 5:12; 2 தீமோத்தேயு 4:4,5).

ஈ. **கண்காணிகள், மூப்பர்கள், மேய்ப்பர்கள் :**

1. இவர்கள் சபையைப் போஷித்துக் கண்காணிக்க வேண்டும் (அப்போஸ்தலர் 20:17,28,35; 1 பேதுரு 5:2).
2. இவர்களுடைய கடமைகளும், தகுதிகளும் என்ன என்பதை 1 தீமோத்தேயு 3–ஆம் அதிகாரம் வசனம் 2 முதல் 8 வரை தெளிவாக விளக்குகிறது.

உ. **உதவிக்காரர்கள் :**

இவர்களுடைய பணி இன்னது என்று தெளிவாக, முழுமையாக விளக்கப்படவில்லை.

1. 1 தீமோத்தேயு 3–ஆம் அதிகாரம் வசனம் 8 முதல் 13 வரை இவர்களுடைய தகுதிகள் வரிசைப்படுத்தப் பட்டுள்ளது.
2. உதவிக்காரர்கள் பந்திவிசாரணைப் பணியைச் செய்து வந்தார்கள். மூப்பர்கள் ஜெபிப்பதிலும், வேதம் வாசிப்பதிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப்போஸ்தலர் 6:1–4).

ஊ. **பரிசுத்தவான்கள் :** (சபை முழுவதும்)

1. தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக அவர்கள் (பரிசுத்தவான்கள்) அன்பில் பரிசுத்தமுள்ளவர்களாகவும், குற்றம் சாட்டப்படாதவர்களாயும் இருக்கவேண்டும் (எபேசியர் 1:4,6).
2. கிருபையிலே வளருகிறவர்களாய் இருக்கவேண்டும் (2 பேதுரு 3:8). கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்படி நாடவேண்டும் (எபேசியர் 4:11).
3. உலகமெங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களாயும், சாட்சியாகவும் இருக்கவேண்டும் (மத்தேயு 28:19; அப்போஸ்தலர் 1:8; 8:4).
4. தேவனோடும், மற்ற சகோதரர்களோடும் ஐக்கியம்கொள்ள வேண்டியவர் களாய் இருக்கிறார்கள் (1 யோவான் 1:3–7).
5. ஒற்றுமையைக் காக்க முயற்சி செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறார்கள் (எபேசியர் 4:3).
6. விழுந்துபோனவர்களை சீர்பொருந்தப்பண்ண பொறுப்புள்ளவர்களாய் இருக்கிறார்கள் (1 கொரிந்தியர் 5:6; 2 கொரிந்தியர் 2:6–8).
7. ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள் (மத்தேயு 18:17; 1 கொரிந்தியர் 5:4,5).
8. சபையில் கண்காணிப்பவர்களை தெரிந்துகொள்ளும் பொறுப்புடையவர் களாக இருக்கிறார்கள் (அப்போஸ்தலர் 6:3–7).
9. சபை ஆசரிக்கும்படி ஆண்டவர் ஏற்படுத்தின காரியங்களை கடைபிடிக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள் (1 கொரிந்தியர் 11:20–34).
10. ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டியவர்களாய் இருக்கிறார்கள் (1 பேதுரு 1:22). அதிகமாய் ஜெபிக்க வேண்டியவர்களாய் (அப்போஸ்தலர் 4:32); பரிசுத்த ஆவியின் வல்லமையின் கீழ் ஜீவித்து உலகமெங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள் (அப்போஸ்தலர் 1:8; 2 தீமோத்தேயு 1:8; ரோமர் 15:19).

## X. சபையின் எதிர்காலம் :

1. 1 தெசலோனிக்கேயர் 4–ஆம் அதிகாரம் வசனம் 13 முதல் 17வரை சபை எடுத்துக் கொள்ளப்படுதலைக் குறித்து தெளிவாக விளக்குகிறது. சபையானது எடுத்துக் கொள்ளப்பட்டு கிறிஸ்துவோடு எப்பொழுதும் இருக்கும்.
2. சபையானது கிறிஸ்தவோடு சேர்ந்து மகிமையடையப்போகிறது. நாம் கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரர்களாய் இருக்கிறோம் (ரோமர் 8:16–18).
3. கர்த்தராகிய கிறிஸ்து மறுபடியும் வரும்பொழுது ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே, அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும் (1 கொரி. 15:50–57).

## XI. சுருக்கம் :

1. **ஸ்தல சபை :**

   புதிய ஏற்பாட்டின் கருத்துப்படி ஸ்தல சபையானது விசுவாசிகள் என்று சொல்லப்படுபவர்களால் ஆன ஒரு அமைப்பு. கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளவும், ஜெபிக்கவும், வேதத்தைப் படிக்கவும், சாட்சி பகரவும், இரட்சிக்கப்பட்டவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும், கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கவும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், ஏற்றவகையில் அமைக்கப்பட்ட ஒரு அமைப்பு (அப்போஸ்தலர் 13:1–4; 20:7; மத்தேயு 28:19,20; 1 தெசலோனிக்கேயர் 1:8; எபிரெயர் 10:25; பிலிப்பியர் 4:14–18).

2. **கிறிஸ்துவின் சரீரமாகிய சர்வலோக சபை :**

   உண்மையாக இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் இச்சபையில் அங்கத்தினர் களாய் இருக்கிறார்கள். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திலே ஒவ்வொருவரும் இச்சபையில் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு அவரே தலையாயிருக்கிறார். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக் கிறது. அவர் வரும்பொழுது சபையானது எடுத்துக் கொள்ளப்பட்டு அவரோடு என்றென்றும் இருக்கும் (எபிரெயர் 12:23,24; 1 கொரிந்தியர் 12:12,13; எபேசியர் 1:22,23; 5:30,31; 2 கொரிந்தியர் 11:2–4; 1 தெசலோனிக்கேயர் 4:15–18).

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்கு முன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# சபை

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**(பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்)**

## சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்

1. ‘எக்லீசியா’ என்ற வார்த்தையின் பொருள்
   a. கர்த்தருக்குச் சொந்தமானது
   b. பிரித்தெடுக்கப்பட்ட மக்களின் கூட்டம்
   c. ஆசீர்வதிக்கப்பட்டது
2. ‘எக்லீசியா’ என்ற வார்த்தையை கிரேக்கர் எவ்விதம் பயன்படுத்துகின்றனர் ?
   a. ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் ஸ்தல சபை
   b. ஜனக்கூட்டம்
   c. மூப்பர்களின் கூட்டம்
3. இஸ்ரவேல் எதன் அடிப்படையில் சபை என்று அழைக்கப்படுகிறது ?
   a. விசுவாசிகளின் கூடுகை
   b. தேசம் முழுவதும் உள்ள மூப்பர்களின் கூட்டம்
   c. பிரித்தெடுக்கப்பட்ட தேவ ஜனங்கள்
4. சபையைக் குறித்ததான போதனையை வெளிப்படுத்துவதற்கு தேவன் எந்த அப்போஸ்தலரை தெரிந்து கொண்டார் ?
   a. பேதுரு b. பவுல் c. மத்தேயு
5. புதிய ஏற்பாட்டில் ‘சபை’ என்கிற வார்த்தை எங்கு இடம் பெற்றுள்ளது ?
   a. அப்போஸ்தலர் 2:42
   b. மத்தேயு 16:18
   c. 1 கொரிந்தியர் 1:1
6. எபேசியர் 2:19–21 வசனங்களில் சபை எவ்விதம் விவரிக்கப்பட்டுள்ளது ?
   a. கட்டிடம் (மாளிகை) b. சரீரம் c. தேசம்
7. சபையில் விசுவாசிகளை சேர்க்கிறது யார் ?
   a. அப்போஸ்தலர்கள் b. பேதுரு c. கர்த்தர்
8. சபையில் ஒரு விசுவாசி எப்போது சேர்க்கப்படுகிறார் ?
   a. சில வகுப்புகளில் கலந்துகொண்ட பிற்பாடு
   b. விசுவாசியானவுடனே
   c. விசுவாசியாகி அநேக மாதங்களுக்குப் பிற்பாடு
9. ஆதித்திருச்சபை பொதுவாக எங்கு கூடி வந்தது ?
   a. ஆலயக் கட்டிடத்தில்
   b. வனாந்தரக் காட்டில்
   c. விசுவாசிகளின் வீட்டில்

**10.** தேவன் விசுவாசிகளை எவ்விதம் சிதறிப்போகப் பண்ணினார் ?

a. அவர்கள் எங்கே போக வேண்டுமென்று தெளிவாக சொன்னார்

b. கடுமையான உபத்திரவத்தின் மூலம்

c. பவுலை அந்தியோகியாவுக்கு அனுப்பி வைத்ததன் மூலம்

**11.** புதிய ஏற்பாட்டில் 'போதகருக்கு' பயன்படுத்திய மற்ற வார்த்தைகள் என்ன ?

a. கண்காணி b. உதவிக்காரர்

c. மூப்பர் d. பிரசங்கிப்பவர்

e. மேய்ப்பன்

**12.** ஆதி ஸ்தல சபைகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட போதகர்கள் இருந்தார்களா ?

a. ஆம் b. இல்லை

**13.** சபையின் இரண்டு நியமங்கள் என்ன ?

a. திருமணம் b. ஞானஸ்நானம்

c. அறிக்கை d. கர்த்தரின் பந்தி

**14.** சர்வலோக சபை ஸ்தல சபையிலிருந்து எவ்விதம் வேறுபடுகிறது ?

a. சர்வலோக சபை கண்களினால் பார்க்க முடியாது. ஆனால் ஸ்தல சபை கண்களினால் பார்க்க முடியும்.

b. சர்வலோக சபையில் விசுவாசிகளும், அவிசுவாசிகளும் இருக்கின்றனர். ஸ்தல சபையில் விசுவாசிகள் மட்டும் அங்கத்தினர்களாக இருக்கின்றனர்.

c. ஸ்தல சபை சர்வலோகத்திலும், சர்வலோக சபை பல்வேறு இடங்களிலும் இருக்கிறது.

**15.** சபைக்கும் இஸ்ரவேலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன ?

a. இஸ்ரவேல் யெகோவாவின் உண்மையற்ற மனைவி. ஆனால் சபையோ கிறிஸ்துவின் மணவாட்டியாகும்.

b. பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் தேவனின் தேசமாகும். ஆனால் சபையானது ஓரிடத்தில் கூடிவரும் மக்களின் கூட்டமாகும்.

c. இஸ்ரவேல் உண்மையற்றதாகும். ஆனால் சபையோ எப்போதும் உண்மையுள்ளதாகும்.

**16.** சபையின் எதிர்காலம் என்ன ?

a. உபத்திரவக் காலத்தில் கடந்து செல்லும்

b. கிறிஸ்துவின் வருகையிலே சபை எடுத்துக் கொள்ளப்படும்

c. ஆயிரவருட அரசாட்சியில் கிறிஸ்துவுடன் இருக்கும்

**17.** **நிரப்புக :–** தேவன் தம்முடைய அநந்த ஞானத்தை ––––––––––––––––––– வெளிப்படுத்த விரும்பினார்.

**18.** பழைய ஏற்பாட்டில் சபையானது –––––––––––––––––––––––––––––––––––––––––––––

**19.** அப்போஸ்தலர் 2:41–42 வசனங்களில், எருசலேம் திருச்சபையில் ஞானஸ்நானத்தோடு கூட செய்த **மூன்று** காரியங்களை எழுதவும். (வசனத்தின் அடிப்படையில் எழுதவும்)

a. –––––––––––––––––––––––––––––––––––––––––––––

b. –––––––––––––––––––––––––––––––––––––––––––––

c. –––––––––––––––––––––––––––––––––––––––––––––

20. ஸ்தல சபையில் உள்ள தலைவர்கள் யார் ?

a. அப்போஸ்தலர் 6:1–4 ------------------------------------------

b. அப்போஸ்தலர் 11:30 ------------------------------------------

21. அப்போஸ்தலர் 20:7–ன்படி, ஆதித்திருச்சபை எந்த நாளில் கூடி வந்தது ? ------------------------------

22. ஆதித்திருச்சபையில் அங்கத்தினராவதற்கு அடிப்படை தேவைகள் **இரண்டை** கூறுக:–

a. ------------------------------------------

b. ------------------------------------------

23. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களின்படி, சபை அங்கத்தினர்கள் எதை செய்யும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள் ?

a. 2 பேதுரு 3:18 --------------------------------------------------------------

b. மத்தேயு 28:19,20 --------------------------------------------------------------

c. அப்போஸ்தலர் 6:3–7 --------------------------------------------------------------

d. 1 கொரிந்தியர் 11:20–34 --------------------------------------------------------------

e. 1 பேதுரு 1:22 --------------------------------------------------------------

24. இந்தப் பாடத்தின்படி, ஸ்தல சபையின் விளக்கத்தை சுருக்கமாக எழுதுக.

--------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------

25. இந்தப் பாடத்தின்படி கிறிஸ்துவின் சரீரமாகிய சர்வலோக சபையின் விளக்கத்தை சுருக்கமாக எழுதுக.

--------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------

26. **பொருத்துக :–** புதிய ஏற்பாட்டில் சபைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பெயர்கள் என்ன ? (சரியான வசனத்தை வார்த்தைகளுக்கு முன்பு எடுத்து எழுதவும்)

| | | |
|---|---|---|
| ------------- | சரீரம் | a. எபேசியர் 4:12 |
| ------------- | கிறிஸ்துவின் சரீரம் | b. எபேசியர் 2:15 |
| ------------- | தேவனுடைய மாளிகை | c. 2 கொரிந்தியர் 11:2 |
| ------------- | புதிய மனுஷன் | d. கொலோசெயர் 3:15 |
| ------------- | கிறிஸ்துவின் மணவாட்டி | e. 1 கொரிந்தியர் 3:9 |

**அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்**

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ____________________________________________

**முகவரி :** ____________________________________________

____________________________________________